**Published on 14, Jan-2025** **ISSN: 3049-2688 (Online)**

# பொன்னியின் செல்வன் சென்னை நாடக அரங்கில்

இ. குமணன்
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்

பேராசிரியர் ப. மகாலிங்கம்
நெறியாளர் – பேராசிரியர் – புல முதல்வர் – மொழிகள் புலம் – தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம் பல்லாவரம்
சென்னை – 600 117, தமிழ்நாடு – இந்தியா

**ஆய்வுச்சுருக்கம்**

பொன்னியின் செல்வன், தமிழ் நாவல் உலகின் உச்ச நட்சத்திர நாயகன், கல்கி வார இதழுக்காக வாசகர்களைக் காத்திருக்கச் செய்த காவியத் தலைவன். கல்கி வார இதழில், கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களால் வாரத் தொடராக எழுதப்பட்ட புனைகதைப் புதினம் தான் பொன்னியின் செல்வன்.

1950 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ஆம் தேதி வெளியான கல்கி வார இதழில் தொடராக வெளிவரத் தொடங்கிய பொன்னியின் செல்வன் 1954ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் தேதி வெளியான கல்கி வார இதழில் நிறைவு பெற்றது. 1954-2024 பொன்னியின் செல்வனின் 70வது ஆண்டு. 70 ஆண்டு காணும் பொன்னியின் செல்வன், இந்த நீண்ட பயணத்தில் பெற்ற காட்சி ஊடக வடிவங்களின் வரலாற்றை ஆய்கின்றது இக்கட்டுரை.

**திறவுச் சொற்கள்:** பொன்னியின் செல்வன் திரைப்பட முயற்சி 1999, 2014, 2015, 2017, 2022, 2024 ஆம் ஆண்டுகளில் பொன்னியின் செல்வன் நாடகங்கள்

**முன்னுரை**

பொன்னியின் செல்வன் மூன்றரை ஆண்டுகள் கல்கி வார இதழில் தொடராக வந்த போதும், 1955ஆம் ஆண்டு ஐந்து தொகுதிகளாக, முழு நாவலாக வெளிவந்த போதும், பெற்ற வரவேற்பு ஒரு வரலாற்றுப் பதிவு. வாசகர்களுக்கிடையே மட்டுமல்லாமல் அந்நாளில் மிகப் பிரபலமாக இருந்த திரைக் கலைஞர்கள் மத்தியிலும் பொன்னியின் செல்வன் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. பொன்னியின் செல்வன் புதினத்தைத் திரை வடிவில் கொண்டு வர வேண்டும் என்ற முயற்சி 1958ஆம் ஆண்டு தொடங்கியது.

பொன்னியின் செல்வன் புதினத்தைத் திரைப்படமாக ஆக்க வேண்டும் என்ற முயற்சியில் முதலில் ஈடுபட்டவர் மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள். 1958ஆம் ஆண்டு நாடோடி மன்னன் பட வெற்றிக்குப் பின்பு எம்.ஜி.ஆர். அவர்கள் பொன்னியின் செல்வன் நாவலின் உரிமையைப் பெற்றுப் பொன்னியின் செல்வன் படம் குறித்து முழுப் பக்க விளம்பரத்தைப் பத்திரிகையில் வெளியிட்டார். பத்திரிகை விளம்பரத்தோடு பல காரணங்களினால் நின்று போனது அம்முயற்சி. கமல்ஹாசன் அவர்களது முயற்சி படப் பூஜையோடு முடிந்து போனது.

1958 ஆம் ஆண்டிற்குப் பிறகு 64 ஆண்டுகள் கழித்து 2022, 2023 ஆம் ஆண்டுகளில் கல்கியின் பொன்னியின் செல்வனை அடிப்படையாக வைத்து மணிரத்தினம் அவர்களின் பொன்னியின் செல்வன் இரண்டு பாகங்களாக வெளிவந்து வெற்றி பெற்றது இன்று வரலாறாகியுள்ளது. நாம் அனைவரும் நன்கு அறிந்த இந்தப் பொன்னியின் செல்வன் கலைப் பயணத்தில் பெரிதும் அறியப்படாத ஒரு பகுதி இருக்கின்றது. திரைப்பட வடிவின் முன்னோடியான நாடக வடிவில், பொன்னியின் செல்வன் கம்பீரமாய் கல்கியின் பொன்னியின் செல்வனாகவே உயிர்பெற்ற வரலாறு, படம் வெளிவருவதற்கு 23

ஆண்டுகளுக்கு முன்பே 1999ஆம் ஆண்டில் நிகழ்ந்துள்ளது. 1999ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை சென்னை நாடக மேடைகளில் பொன்னியின் செல்வன் உலா பற்றி விரிவாய்க் காண்போம்.

### 1999ஆம் ஆண்டில் பொன்னியின் செல்வன்

பொன்னியின் செல்வன் நாவல் நாடகமாக வெளிவந்தது சென்னையில் 1999 ஆம் ஆண்டு. மேஜிக் லாண்டர்ன் கலைக் குழுவினர் அதை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார்கள்.

'1992ஆம் ஆண்டு முதல் மேஜிக் லாண்டர்ன் நாடகக் குழு சார்பாக ஷேக்ஸ்பியர் நாடகங்களைத் தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் நடத்தி வந்தோம். அப்போது நண்பர் ஒருவர் நீங்கள் ஏன் பொன்னியின் செல்வனை மேடை நாடகமாக நடத்தக் கூடாது என்று கேட்டார். கல்கியின் மிகப்பெரிய வெற்றிக்குக் காரணம், அவருடைய நகைச்சுவையும் எளிமையும் கலந்த எழுத்துதான், அதனால் அவரது எழுத்தை அப்படியே பயன்படுத்தலாம் என்று முடிவு செய்தேன். 1999ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஐந்து, ஆறு, ஏழு, எட்டு ஆகிய தேதிகளில் பொன்னியின் செல்வன் நாடகத்தைச் சென்னை ஒய்.எம்.சி.ஏ. திறந்த வெளி அரங்கில் அரங்கேற்றம் செய்தோம். அந்த அரங்கேற்றம் எங்களுக்கு அத்தனை எளிதாக அமைந்துவிடவில்லை. தமிழ் நாடக உலகின் முன்னோடிகள் திரையுலக நண்பர் கள் பலர் எங்களுக்கு உறுதுணையாக இருந்தார்கள்', என்கிறார் பொன்னியன் செல்வன் நாடக எழுத்தாளர், திரைப்பட நடிகர் இளங்கோ குமரவேல்.

கல்கியின் எழுத்தில் இருந்த அந்த பிரம்மா ண்டத்தைக் காட்சிப்படுத்த எங்களுக்கு மிகப்பெரிய கலைக்குழு தேவைப்பட்டது. இரு சிந்தனையில்லாமல் நாங்கள் அணுகிய இடம் கூத்துப்பட்டறை. என் குருநாதர் ந.முத்துசாமி அவர்களிடம் எங்கள் தேவையைத் தெரிவித்த போது ஐந்து மாதங்கள் கூத்துப்பட்டறைக் கலைஞர்களை எங்கள் படைப்பில் கலந்து கொள்ள அனுப்பி வைத்தார், நாடகத்திற்குத் தேவையான உபகரணங்களையும் தந்து உதவினார். புதுச்சேரி பல்கலைக்கழக இசைப் பேராசிரியர் கே.ஏ. குணசேகரன் பாடல் இசைத்துத் தந்தார். பேராசிரியர் ராஜு அவர்கள் பெரிய வேளாளராக நடித்து உதவினார். நடிகர் நாசர் அவதாரம் படத்தில் பயன்படுத்திய ஆடைகள், நகைகள், போர்க்கருவிகள் அனைத்தையும் தந்து உதவினார். அலையன்ஸ் பிரான்சிஸ், தென்னிந்தியப் பண்பாட்டு மையம் ஆகியவற்றின் துணை, நாடகத்திற்குப் பெரும் பலம் சேர்த்தது. முதல் காட்சி தொடங்கி எல்லாக் காட்சிகளிலும் பெரிய பழுவேட்டரையராக நடித்துச் சிறப்பு செய்தார் பேராசிரியர் மு. ராமசாமி. கலை இயக்குநர் தோட்டா தரணியின் அரங்க அமைப்பு நாடகத்திற்குப் பெரும் சிறப்பு சேர்த்தது,' எனப் பொன்னியின் செல்வன் 1999ஆம் ஆண்டு நாடகமாக அரங்கேறிய போது பின்னின்றவர்களை நினைவு கூர்கிறார் இளங்கோ குமரவேல். பொன்னியின் செல்வன் நாடகத்தின் இயக்குனர் பிரவீன் கண்ணனூர் பிரான்ஸின் அரியான் முஷ்கினிடம் பயின்றவர். பல ஆங்கில நாடகங்களின் தமிழ் வடிவை இயக்கியவர். ஒரே அரங்கம், அதிலேயே காட்சி மாற்றம், மேடையின் பயன்பாடு, அணையாத விளக்கு, நடிகர்களின் நடிப்பு என நாடகம் முழுமையும் ஒரு புதுமையை, பிரமிப்பை உருவாக்கி இருந்தார் இயக்குநர் பிரவீன்.

'நந்தனம் ஒய். எம். சி. ஏ. திறந்தவெளி அரங்கில் கலை இயக்குநர் தோட்டா தரணி அவர்கள் 120 அடி நீளம், என்பதடி அகலம், 35 அடி உயரம் என அமைத்த இரண்டு அடுக்கு அரங்கில் எங்கள் நாடகம் அரங்கேறியது. மேடைக்கு முன்னும் பின்னும் 150க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்றனர். உடைகள் - நளினி ஸ்ரீராம், ஒப்பனை-பானு, இசை-கருண பிரசாத் எனத் திறமையான ஆளுமைகள் உடன் இணைந்தார்கள். வெளிப்புறத் திறந்த அரங்கிற்கு ஏற்ப ஒலி அளவிற்கு எல்லை இல்லாது, பல இசைக்கருவிகள் இசைக்கப் பட்டு, நாடகத்திற்குப் பெரும் பலம் சேர்த்தன. இப்படைப்பை இயக்கியது ஒரு பெரும் சவால், அதே நேரம் ஒரு சுவையான அனுபவமும் கூட', என்கிறார் இயக்குநர் பிரவீன்.

பொன்னியின் செல்வன் நாடக அரங்கேற்ற த்தின் போது அப்போதே திரையுலகில் பிரபலமாக இருந்த நடிகர் நாசர் அவர்கள் மூன்று நாட்கள் ஆதித்ய கரிகாலனாகவும், அப்போது திரையுலகில் பிரபலமாகாத நடிகர் பசுபதி ஒருநாள் ஆதித்ய கரிகாலனா கவும், குமரவேல் ரவிதாசனாகவும், ஜெயக்

குமார் வந்தியத்தேவனாகவும் நடித்திருந்தார் கள். நடிகர்களுக்குத் தமிழ் மொழிப் பயிற்சி அளிக்கச் சென்ற சென்னை வானொலியில் நாடகத் தயாரிப்பாளராகப் பணியாற்றிய புனிதவதி இளங்கோவன் செம்பியன் மாதேவியாக நடித்தார். நான்கு நாட்கள் நடைபெற்ற நாடகத்தின் கடைசி நாள் திரைக் கலைஞர்கள் கமல்ஹாசன், ரஜினிகாந்த் இருவரும் கண்டு களித்தனர்.

1999ஆம் ஆண்டில் நான்கு நாட்கள் நடைபெற்ற நாடகம் அதன் பிறகு ஒரு முறை கூட மேடை ஏறவில்லை. பொருளா தாரச் சூழல் சாதகமாக அமையவில்லை என்றார்கள் குழுவினர். அப்போது சென்னை யில் நாடகங்கள் நடத்திக் கொண்டிருந்த வேறு எந்த நாடகக் குழுவும் பொன்னியின் செல்வனை நாடகமாக அரங்கேற்றத் துணிய வில்லை. அந்நிலையில் 2014ஆம் ஆண்டு பொன்னியின் செல்வன் நாடகத்தை மீண்டும் மேடையில் அரங்கேற்ற வேண்டும் என்று முன் வந்தார்கள், சென்னையைத் தளமாகக் கொண்ட ஒரு விளம்பர நிறுவனத்தினர்.

## 2014ஆம் ஆண்டில் பொன்னியின் செல்வன்

2012ஆம் ஆண்டு முதல் சென்னை மியூசிக் அகாடமி அரங்கில் கலை நிகழ்ச்சிகள் நடத்திக் கொண்டிருந்த விளம்பர நிறுவனம் எஸ்.எஸ்.இன்டர்நேஷனல் லைவ். பெரும் பாலும் இசை நிகழ்ச்சிகளை மட்டுமே நடத்திக் கொண்டு இருந்த நிறுவனத்தினர், பார்வையாளர்களுக்குப் புதிதாக ஏதாவது ஒரு படைப்பைத் தர வேண்டும் என்று எண்ணிப் பொன்னியின் செல்வனை ஏன் மீண்டும் நாடகமாக மேடையேற்றக் கூடாது என்று சிந்தித்து, 1999ஆம் ஆண்டு பொன்னி யின் செல்வனை மேடை ஏற்றிய மேஜிக் லாண்டர்ன் குழுவினரை அணுகினார்கள். 15 ஆண்டுகள் கழித்து மீண்டும் மேடை ஏற்றமா? சிந்தித்துச் சொல்கின்றோம் என்ற மேஜிக் லாண்டர்ன், பிறகு மேடை ஏறத் தயாரானார்கள். 1999ஆம் ஆண்டில் மேடை ஏறிய சில நடிகர்கள், சில தொழில்நுட்பக் கலைஞர்களுடன், முற்றிலும் புதியவர்களை சேர்த்துக்கொண்டு மேடை ஏறத் தயாரா னார்கள் மேஜிக் லாண்டர்ன் குழுவினர்.

2014ஆம் ஆண்டு பொன்னியின் செல்வன் தொடர், கல்கியில் நிறைவுற்ற கணக்கில் 60 ஆண்டுகள் நிறைவைக் குறிக்கும் வகையில் பொன்னியின் செல்வன் 60 ஆண்டுத் திருவிழா என்ற முன்னெடுப்பில் ஜூலை 8 முதல் 14 வரை ஒரு திருவிழாவாகப் பொன்னியின் செல்வன் நாடகத்தை நடத்திக் காட்டினோம் என்கிறார்கள் எஸ். எஸ். இன்டர்நேஷனல் லைவ் இயக்குநர்கள் முரளிதரன், அனந்தகிருஷ்ணன். 'எங்கள் முயற்சியைப் பொன்னியின் செல்வன் நாடக அரங்கேற்றத்தோடு நிறுத்தி விடாமல் நாடக அரங்கின் வாயிலில் பொன்னியின் செல்வன் தொடர்பான ஒரு கண்காட்சிக் கும் ஏற்பாடு செய்திருந்தோம். சோழர் காலத்தில் உபயோகப்படுத்தப்பட்ட பொருட் கள், பொன்னியின் செல்வன் நாவல் தொடர்பான குறிப்புகள், அமரர் கல்கியின் கையெழுத்தில் நாவலுக்கான குறிப்புகள், ஆகியன கண்காட்சியில் இடம் பெற்றன. தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை கண்காட்சியில் இணைந்தது தனிச்சிறப்பு. நாடகத் திருவிழாவின் தொடக்கத்தைக் கல்கி ராஜேந்திரன், மணியம் செல்வம் ஆகியோரை வைத்துச் செய்தது கல்கிக்கும் மணியம் அவர்களுக்கும் நாங்கள் காட்டிய மரியாதை, தொடக்க நாள் அன்றே கல்கி அறக்கட்டளைக்கு ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியது நாங்கள் காட்டிய நன்றி உணர்வு' என்ற தகவல்களைத் தருகின்றார் நிறுவனத்தின் மற்றொரு இயக்குநர் இளங்கோ குமணன்.

'2014ஆம் ஆண்டில் பொன்னியின் செல்வன் நாடகத்தை மீண்டும் அரங்கேற்றியபோது, இப்போது முன்னேறி இருக்கிற எல்லா தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தினோம். அதனால் போர், வாள் சண்டை, அரண் மனைகள், காதல் காட்சிகள், கோட்டை மதிலில் குத்துச்சண்டை எல்லாமே இருந்தன. நிஜ சண்டை, நிஜ கத்திகள், நிஜ வாள்கள் சண்டையில் தீப்பொறி பறப்பதைப் பார்வை யாளர்கள் கண்டனர். கருவிகள் அனைத்தும் மணிப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாநிலங் களில் இருந்து தருவிக்கப்பட்டவை. 2014 நாடகத்திற்கு இசை பால் ஜேக்கப். உள் அரங்கத்திற்கு ஏற்ப இசையின் தன்மையை மாற்றி அமைக்க வேண்டியதைத் திறம்படக் கையாண்டு இருந்தார் பால் ஜேக்கப். தஞ்சை மாவட்ட ஓதுவார்கள் தேவாரம் திருமுறை பாடியிருந்தார்கள்' என்கிறார்கள் இளங்கோ குமரவேல் பிரவீன் கண்ணனூர்.

2014ஆம் ஆண்டில் சென்னை மியூசிக் அகாடமியில் நடைபெற்ற ஏழு நாட்களின் காட்சிகளும் அரங்கம் நிறைந்த காட்சிகள்

ஆகிப் பொன்னியின் செல்வன் நாடகம் மாபெரும் வரவேற்பைப் பெற்றது. இம்முறை 7 நாட்களும் ஆதித்ய கரிகாலனாகப் பிரபல நடிகர் பசுபதி நடித்தார். நடனம், சண்டைக் காட்சிகள் ஆகியவற்றிற்கும் அவரே பயிற்சி அளித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1999 ஆம் ஆண்டிற்குப் பிறகு 15 ஆண்டுகள் கழித்து அரங்கேறிய பொன்னியின் செல்வனை இரண்டாவது முறையாகவும் கண்டு ரசித்தார் நடிகர் ரஜினிகாந்த். தமிழகத்தின் பல பகுதிகளில் 2014ஆம் ஆண்டு பொன்னியின் செல்வன் நாடகம் நடைபெற்றுப் பெரும் வரவேற்பைப் பெற்றது.

## 2015ஆம் ஆண்டில் பொன்னியின் செல்வன்

2015ஆம் ஆண்டில் சென்னை மியூசிக் அகாடமியில் ஜூலை 3 முதல் 12 வரை அரங்கு நிறைந்த காட்சிகளாகப் பொன்னியின் செல்வன் நாடகத்தை நடத்தியது எஸ். எஸ். இன்டர்நேஷனல் லைவ். இம்முறையும் வாயிலில் கண்காட்சி கூடுதல் தகவலுடன் அமைக்கப்பட்டு இருந்தது. 'படியுங்கள் பாருங்கள்' என்ற ஒரு அறிவிப்பை 2015ஆம் ஆண்டில் செய்தோம். இரண்டு டிக்கெட்டுகள் வாங்குபவர்களுக்குப் பொன்னியின் செல்வன் நாவல் இலவசம் என்று விளம்பரம் செய்தோம். பொன்னியின் செல்வன் நாவலைப் படிக்காதவர்களும் படிக்க வேண்டும் என்ற விருப்பத்துடன் விளம்பரதாரர்கள் துணையுடன் செய்யப்பட்ட முயற்சி அது. நாவலைப் பார்த்துவிட்டுக் 'கல்கிக்கு மரியாதை செய்துவிட்டீர்கள்' என்று கி. ராஜேந்திரன் பாராட்டியது நினைவிலேயே நிற்கிறது,' என்கிறார்கள் எஸ். எஸ். இன்டர்நேஷனல் லைவ் இயக்குநர்கள்.

2015ஆம் ஆண்டு மேடை ஏறிய பொன்னியின் செல்வன் நாடகம் பற்றிக் குமுதம் வார இதழின் அரசு கேள்வி பதில் பகுதியில் பிளாக்கில் டிக்கெட் வாங்கியாவது நாடகத்தைப் பார்த்து விட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். சிவக்குமார் முதல் சிவகார்த்திகேயன் வரை திரையுலகின் கலைஞர்கள் பலர் நாடகத்தைக் கண்டு ரசித்தனர். இப்படிப் பல முனைகளிலும் வெற்றியைத் தொட்ட பொன்னியன் செல்வன் நாடகத்தை 2015க்கு பிறகு மேடை ஏற்றவில்லை. எஸ். எஸ். இன்டர்நேஷனல் லைவ் நிறுவனத்தினர். 'எங்கள் முயற்சிகள், நிகழ்ச்சிகள் தனித்தன்மை வாய்ந்தவை. எங்களின் அந்தத் தனித்தன்மைக்காகவே விளம்பரதாரர்கள் எங்களுக்கு முக்கியத்துவம் தந்திருந்தார்கள். அவர்களின் துணையோடு தான் பொன்னியின் செல்வனை பிரம்மாண்டமாய்ப் பல காட்சிகள் நடத்த முடிந்தது. 2015ஆம் ஆண்டில் மற்ற நாடகக் குழுக்கள் பொன்னியின் செல்வனை அரங்கேற்ற முன்வந்த பிறகு நாங்கள் நிறுத்திக் கொள்வதே எங்கள் படைப்பிற்கு நாங்கள் செய்யும் மரியாதையென்று முடிவு செய்தோம்', என்கிறார்கள் இந்நிறுவன இயக்குநர்கள்.

2015ஆம் ஆண்டு ஆடுதுறை ஸ்ரீ சங்கர நாராயண சபாவினர் நடிக்கும், சென்னை ராஜ் விஷுவல் ஆர்ட்ஸ் தயாரிப்பில், சென்னை ஸ்ரீதேவி பைன் ஆர்ட்ஸ் வழங்கும் அமரர் கல்கியின் பொன்னியின் செல்வன் 2015 ஏப்ரல் 10, 11, 12 நாரத கான சபாவில் என்று அறிவிப்பு வெளியானது. '2007ஆம் ஆண்டு கும்பகோணம் வாணி விலாஸ் சபாவில் நாங்கள் பொன்னியின் செல்வன் நாடகம் நடத்திக் கொண்டிருந்தபோது, எங்களுக்கு அரங்கம் அமைத்தவர் மதுரைக் கண்ணன். பல ஆண்டுகளுக்குப் பிறகு 2014 இறுதியில் கண்ணன் என்னைத் தொடர்பு கொண்டு சென்னையில் பொன்னியின் செல்வன் நாடகம் நடத்த வருமாறு அழைத்தார். சென்னை வந்து பொன்னியின் செல்வனை 2015ஆம் ஆண்டில் மேடை ஏற்றினோம். நாடகம் 26 காட்சிகள் அரங்கேறியது. எங்கள் நாடகத்திற்கான வசனங்களை எழுதியது கலைச்செல்வம் சாம்பு,' என்கிறார் ராஜ் விஷுவல் பொன்னியின் செல்வன் நாடக இயக்குநர் ஆடுதுறை பாஸ்கர் அவர்கள்.

2015ஆம் ஆண்டிலேயே பொன்னியின் செல்வன் நாடகத்தை அரங்கேற்றிய மற்றொரு குழு டி. வி. கே. கல்ச்சுரல் அகாடமி. டி.வி.கே.ரமேஷ் தயாரிப்பில் மல்லிக்ராஜ் இயக்கத்தில் 2015 ஜூன் 25, 26, 27 ஆகிய தேதிகளில் ராஜா அண்ணாமலை மன்றத்தில் மேடையேறுகின்றது பொன்னியின் செல்வன். 'எஸ். எஸ். இன்டர்நேஷனல் லைவ் தயாரிப்பில் வழங்கிய பொன்னியின் செல்வன் நாடகமே எங்கள் பொன்னியின் செல்வன் நாடகத்திற்கும் அதனைத் தொடர்ந்த வரலாற்று நாடகங்களுக்கும் ஒரு அடிப்படை ஊக்கி என்பதை நான் எங்கும் எப்போதும் உறுதியாய்ச் சொல்வேன்', என்கிறார் இன்று அஜய் என்டர்டைன்ஸ் குழுவின் சார்பில் பொன்னியின் செல்வன்

நாடகத்தை நடத்திவரும் இயக்குநர் மல்லிக் ராஜ். இவரின் பொன்னியின் செல்வன் நாடகம் 2015 முதல் இப்பொழுது வரை தமிழ்நாட்டிலும் பிற மாநிலங்களிலும் 265 முறைக்கு மேல் மேடை ஏறி ஒரு சாதனை யைப் படைத்திருக்கின்றது. இவரின் நாடகத்திற்கு வசனம் பூவை தயா.

### 2017 ஆம் ஆண்டில் பொன்னியின் செல்வன்

2017ஆம் ஆண்டு பொன்னியின் செல்வன் நாடகத்திற்கும், தமிழ் நாடக உலகிற்கும் பெருமை சேர்க்கும் நிகழ்வு ஒன்று நடை பெற்றது. சிங்கப்பூர் தமிழ் மொழி விழாவில் ஒரு பகுதியாக ஏப்ரல் 28, 29, 30 ஆகிய தேதிகளில் எஸ்பிளனேடு அரங்கில் பொன்னி யின் செல்வன் அரங்கு நிறைந்த காட்சி களாக நடைபெற்றது. ஒரு காட்சிக்கு 3000 பார்வையாளர்கள் என மூன்று காட்சிகளில் 9000 பார்வையாளர்கள் பொன்னியின் செல்வன் நாடகத்தைக் கண்டு களித்தனர். எஸ். எஸ். இன்டர்நேஷனல் லைவ், மேஜிக் லாண்டர்ன் இணைந்து 2014 முதல் 2017 வரை பொன்னியின் செல்வன் நாடகத்தை 37 முறை மேடையேற்றி உள்ளது.

### 2022 ஆம் ஆண்டில் பொன்னியின் செல்வன்

2022ஆம் ஆண்டு ஜூலை 24 கூல் ஈவென்ட்ஸ் குமார் பொன்னியின் செல்வன் நாடகத்தை அரங்கேற்றினார். சி.வி. சந்திர மோகன் எழுத்தில் வந்தியத் தேவனின் வீரப்பயணம் என்ற தலைப்பில் பொன்னியின் செல்வன் நாடகத்தை நடித்து இயக்கினார் குட்டி. இந்த நாடகம் ஆறு முறை மேடை ஏறியது. 2022 ஆம் ஆண்டிலேயே மே மாதம் எட்டாம் தேதி ஸ்ரீ அன்னை கிரியேஷன் பரத்வாஜ் பொன்னியின் செல்வனை மேடை ஏற்றினார். ஸ்ரீ சங்கர்லால் சுந்தர் பாய் ஷாகன் ஜெயின் மகளிர் கல்லூரி மாணவிகள் நடித்திருந்தார்கள். எழுதியவர் பேராசிரியர் ராணி மனோகரன். இப்படைப்பு மூன்று முறை மேடையேறி உள்ளது.

### 2024ஆம் ஆண்டில் பொன்னியின் செல்வன்

2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எட்டாம் தேதி சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் நவீன் பைனான்ஸ் என்ற குழுவினருக்காக மீண்டும் பொன்னியின் செல்வன் நாடகத்தை அரங்கேற்றுகின்றோம், என்ற தகவலை தெரிவிக்கின்றார் இயக்குநர் மல்லிக்ராஜ்.

சென்னை நகர நாடக அரங்கில் நடைபெற்ற பொன்னியின் செல்வன் நாடக வரலாற்று க்கு 'முன் வரலாறு' ஆக 2015இல் சென்னை யில் பொன்னியின் செல்வன் நாடகத்தை நடத்திய ஆடுதுறை பாஸ்கர் பின் வரும் தகவலைப் பதிவுசெய்கின்றார்.

ஆடுதுறை ஸ்ரீ சங்கர நாராயண சபா 69வது ஆண்டு விழாவையொட்டி 1988ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் தேதியன்று ஆடுதுறை ஸ்ரீ ஆபத்சாயேஸ்வரர் கோயில் அப்பர் அரங்கில் இரவு 10.30 மணிக்கு பொன்னியின் செல்வன் நாடகம் நடைபெற்றது என்ற தகவலுடன் அதற்கான அழைப்பிதழையும் சான்றாக்கு கின்றார்.

### முடிவுரை

தமிழ் இலக்கிய உலகின் ஆகச்சிறந்த படைப்புகள் திரை வடிவம் பெற்ற வரலாறு நிரம்ப உண்டு. ஒரு குறிப்பிட்ட படைப்பை ஊடக வடிவில் காட்சிப்படுத்த வேண்டும் என்ற திரையுலகின் தலைசிறந்த கலைஞர் கள் 60 ஆண்டுகளாக முயன்று அதன் பிறகு அது சாத்தியமான வரலாறு பொன்னியின் செல்வன் நாவலுக்கு மட்டுமே உண்டு. 2022 ஆம் ஆண்டு வெளியான பொன்னியின் செல்வன் திரைப்படம் அதன் ஆளுமை களின் பலத்தில் நாடு தழுவிய வெற்றியைப் பெற்றுக் குன்றிலிட்ட விளக்காக ஒளிர்ந்து கொண்டிருக்கின்றது, அதற்கு 23 ஆண்டு களுக்கு முன்பாகவேத் தொடங்கி தொடர்ந்து கொண்டிருக்கும் பொன்னியின் செல்வன் நாடக வரலாறு குடத்திலிட்ட விளக்காகவே அமைந்துவிட்டது. அந்த ஒளியை உலகின் பார்வைக்குக் காட்ட வேண்டும் என்பதே கட்டுரையின் நோக்கம்.

எழுத்தாய் - நேரடி நடிப்பாய் - திரை வடிவாய் - இப்படி எந்த வடிவில் வந்தாலும் ராஜ நடை போடும் பொன்னியின் செல்வனையும், அவனை உயிர்ப்பித்த அமரர் கல்கி அவர்களையும் வணங்கி நிறைவுறுகின்றது இக்கட்டுரை.

### துணையன்கள்

நேர்காணல்கள் – இளங்கோ குமரவேல், பிரவீன் கண்ணனூர், முரளிதரன், அனந்தக்ருஷ்ணன், இளங்கோ குமணன், ஆடுதுறை பாஸ்கர், மல்லிக்ராஜ், கூல் ஈவன்ட்ஸ் குமார், பரத்வாஜ்.